# பன்னிரண்டாம் வகுப்பு
# பொதுத்தமிழ்
## இயல் - 5
## சிறு தேர்வு - 5

**தேர்வு நேரம் : 60 நிமிடம்.** **மதிப்பெண்கள் : 30**

**I. பலவுள் தெரிக.** **4×1=4**

1. படிமம் என்பதன் பொருள்
அ) சொல் ஆ) செயல் இ)காட்சி ஈ) ஒலி

2) 'விளியறி ஞமலி' - இதில் குறிப்பிடப்படும் விலங்கு எது?
அ) எருது ஆ )குதிரை இ) நாய் ஈ)யாழி

3) சென்னை வெறும் நகரம் மட்டுமல்ல, அது நம்பிக்கை மையம் - காரணம் -
அ) நேரடி, மறைமுக வேலைவாய்ப்புகளின் களம்
ஆ) மென்பொருள், வன்பொருள், வாகன உற்பத்தியில் பங்கு
இ) மென்பொருள் ஏற்றுமதியில் முன்னிலை
ஈ) அ, ஆ, இ - அனைத்தும்

4) பொருத்துக.
அ) திருவல்லிக்கேணி ஆறு - 1) மாவலிபுரச் செலவு
ஆ) பக்கிங்காம் கால்வாய் - 2) கல் கோடாரி
இ) பல்லாவரம் - 3) அருங்காட்சியகம்
ஈ) எழும்பூர் - 4) கூவம்

அ) 1,2,3,4 ஆ) 4,2,1,3 இ) 4,1,2,3 ஈ) 2,4,3,1

**II. எவையேனும் இரண்டுக்கு மட்டும் விடையளி** **2×2=4**

5. கலிவிழா ஒலிவிழா விளக்கம் தருக.

6. கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் குறித்து எழுதுக.

7. அகநானூறு நூல் குறிப்பு தருக.

**III. எவையேனும் மூன்றனுக்கு விடையளி** **3×4=12**

8. இராமலிங்க அடிகள் கந்தவேளிடம் எத்தகையோர் உறவு வேண்டுமெனக் கேட்கிறார்?

www.Padasalai.Net

9.சென்னையின் பண்பாட்டு அடையாளங்களில், இன்றும் நிலைத்து இருப்பனவற்றைக் குறிப்பிடுக.

10. பங்குனி உத்திரத் திருவிழா நடைபெற்ற முறையைத் திருஞான சம்பந்தர் எவ்வாறு பதிவு செய்கிறார்.

11. 'நெல்லின் நேரே வெண்கல் உப்பு' இத்தொடரின் வழி பண்டமாற்று வணிகத்தை விளக்குக.

**IV. எவையேனும் ஒன்றனுக்கு விடையளி.** **1×6=6**

12."கிராமங்கள் தங்கள் முகவரியை இழந்து வருகின்றன" - இது குறித்து உங்கள் கருத்தை விவரிக்க.

13. சென்னையில் உள்ள மயிலாப்பூர், கந்த கோட்டப் பகுதிகள் செய்யுளில் எவ்விதம் காட்சிப்படுத்தப்படுகின்றன?

**V. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் எழுதுக.** **1×4=4**

14 .'ஒருமையுடன் நினதுதிரு' எனத் துவங்கும் தெய்வமணிமாலை பாடல்.

மாணவர்கள் அனைவரும் வெற்றிபெற வாழ்த்துகள்


# கு.மகேந்திரன்

முதுகலை தமிழாசிரியர்

அரசினர் மேல் நிலைப்பள்ளி, மேல்சோழங்குப்பம்,

கலசப்பாக்கம், திருவண்ணாமலை

**9787373206**


www.Padasalai.Net